V.—ANNOUNCEMENT.

THE MADURAI UNIVERSITY BILL, 1965.

MR. SPEAKER: I have to announce to the House that the Governor has given his recommendation for the consideration by the Madras Legislative Assembly of the Madurai University Bill, 1965.

IV.—GOVERNMENT BILLS—*cont.*

(3) THE MADURAI UNIVERSITY BILL, 1965 (L.A. BILL No. 11 OF 1965).

* THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, I move—

"That the concurrence of the Legislative Council be obtained for setting up a Joint Select Committee of both the Houses consisting of 18 members (12 members of the Legislative Assembly and 6 members of the Legislative Council) to consider the Madurai University Bill, 1965 * (L.A. Bill No. 11 of 1965), and that the following Members of the Legislative Assembly be selected to serve on such a Joint Select Committee."

I shall give the names of the members later.

கனம் சபாநாயகர் அவர்களே, இதற்கு முன்பே மதுரையில் ஒரு பல்கலைக் கழகம் அமைக்க வேண்டுமென்ற யோசனை இந்த மன்றத்தில் கூறப்பட்டிருக்கிறது.

MR. SPEAKER: I think the hon. Member Sri M. Kalyanasundaram has given notice of an amendment.

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, after the Bill is moved and the Hon. Minister concerned has made the speech, the amendments can be moved.

MR. SPEAKER: All right.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: மன்ற உறுப்பினர்கள் யாவரும் இதை வரவேற்பார்கள் என்பதில் எனக்கு ஐயமில்லை. பல்கலைக் கழகம் இரண்டுதான் இப்போது தமிழ் நாட்டில் இருக்கின்றன. ஒன்று பழைய சென்னைப் பல்கலைக் கழகம். மற்றொன்று அண்ணா மலைப் பல்கலைக் கழகம். அண்ணாமலைப் பல்கலைக் கழகம் டீச்சிங் பல்கலைக் கழகமாக இருக்கிறது. சிதம்பரத்தை ஒட்டி அது பணி ஆற்றிக் கொண்டு வருகிறது. கடலூருக்கு இல்லை. ஆகையால்தான் கடலூருக்கு ஒரு கல்லூரி வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொண்டு இருந்தார்கள். இப்போது கடலூரில் ஒரு கல்லூரி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, சிதம்பரத்தைப் பொறுத்தவரையில் அங்குள்ள பல்கலைக் கழகம் முழுப் பல்கலைக் கழகம் இல்லை. பாடம் சொல்லிக் கொடுப்பதும் வேண்டும். கல்லூரிகளை இணைப்பதும் வேண்டும். அண்ணாமலைப் பல்கலைக் கழகம் பாடம் சொல்லிக் கொடுப்பதைக் கவனித்துக்

a Published in the *Fort St. George Gazette Extraordinary*, dated 27th July 1965.